**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.STC 1395/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | கலியமூர்த்தி | Prosecution | PW1 cross |
| Father Name | குருசாமி ஆசாரி | Defence | |
| Village | NSP நகர் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 66/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **19.09.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரி ஆஜர்**

**குறுக்கு விசாரணை**

**1.** நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் சீர்காழியில் தான் விவேகானந்தா பள்ளி அருகே குடி இருக்கிறேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் ஆசாரி வேலை செய்கிறேன். எனக்கு ஆண்டு வருமானம் சராசரியாக எவ்வளவு வரும் என்றால் ரூ.10,00,000/- வரும். மாத வருமானம் சராசரியாக எவ்வளவு வரும் என்றால் ரூபாய் 40,000/- வரும். நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் செலுத்துகிறேன்.

2. எதிரி எனக்கு எப்படி அறிமுகம் என்றால் என்னுடைய மகன் மூலமாக அவரை கடந்த 4 வருடங்களாக தெரியும். எதிரி எங்கள் வீட்டுக்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். எனது மகன் பெயர் என்ன என்றால் மணி என்பதாகும். அவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் டிசைனிங் ஒர்க் செய்கிறார். எதிரியை குடும்ப நண்பர் என சொல்லும் நிலையில் அவர் என் மகனுக்கு மட்டும்தான் நண்பரா அல்லது எனக்கும் நண்பரா என்றால் என் மகனுக்கு தான் நண்பர். எதிரியின் குடும்பம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. எனக்கு ஆனந்தன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். ஆனந்தனுக்கும் எதிரிக்கும் என்ன உறவு என்றால் இருவரும் அண்ணன் தம்பி ஆவார்கள். ஆனந்தன் என்னிடம் எவ்வளவு பணம் வாங்கினார் என்றால் அவர் என்னிடம் பணம் வாங்கவில்லை எதிரி தான் வாங்கினார். ஆனந்தன் எனக்கு எந்த வகையில் பழக்கம் என்றால் அவர் அவ்வப்போது என்னிடம் கைமாத்தாக பணம் வாங்கி திரும்ப கொடுப்பார். நான் எனது குடவுனில் ஆனந்தனுக்கு இடம் கொடுத்து உள்ளேனா என்றால் அது பற்றி என் மகனுக்கு தான் தெரியும் எனக்கு தெரியாது. ஆனந்தன் என்னிடம் முன்பணம் கொடுத்ததாக எதிரி சொல்கிறார் என்றால் அது தவறு.

எதிரிக்கு எதை நம்பி இவ்வளவு பெரிய தொகையை கடனாக கொடுத்தேன் என்றால் அவர் தான் புதிதாக இரண்டு கடைகள் ஆரம்பிக்க இருப்பதாக சொல்லி வியாபாரத்திற்கு உதவி செய்யுங்கள் என கேட்டதால் கொடுத்தேன். என்ன ஆவணங்களை வாங்கிக் கொண்டு பணம் கொடுத்தேன் என்றால் பணத்தை மூன்று மாதங்களில் திரும்ப கொடுத்து விடுகிறேன் என்று சொல்லி அவர் ஒரு ஆவணத்தை எழுதி கொடுத்தார். எந்த தேதியில் எழுதிக் கொடுத்தார் என்றால் 21.11.2023ல் எழுதிக் கொடுத்தார்.

4. அவ்வாறு எழுதிக் கொடுக்கும்போது காசோலை கொடுத்தாரா என்றால் கொடுத்தார். 2 காசோலைகள் கொடுத்தார். எழுதிக் கொடுத்ததை வாங்கிக் கொண்டு பிறகு இரண்டு காசாலைகள் கொடுத்தார். காசோலைகள் கொடுத்த பிறகு என்ன கூறினார் என்றால் ஒரு வாரத்தில் பணம் போட்டு விடுவதாகவும் காசோலைகளை போட்டு பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள் என்றும் சொன்னார். எதிரியின் சொந்த ஊர் மற்றும் பூர்வீகம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது எனது பையனோடு அவருக்கு பழக்க வழக்கம் இருந்ததால் நான் எதையும் விசாரிக்கவில்லை.

5. எதிரி எனது வீட்டுக்கு வந்ததில்லை என்றாலும் என் மகனை அவர் பார்த்ததே இல்லை என்றாலும் சரியல்ல. என் மகனும் எதிரியும் நண்பர்கள் கிடையாது என்றால் சரியல்ல. நான் எதிரியின் அண்ணனுக்கு குடோன் கொடுத்துள்ளேன் என்றாலும் அதற்காக ரூ.40,000/- அட்வான்ஸ் வாங்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரியின் அண்ணன் எனக்கு குடோன் வாடகை பாக்கி வைத்துள்ளார் என்றாலும் அதனை வசூலிப்பதற்காக எதிரியின் காசோலைகளை தவறாக பயன்படுத்தி இந்த பொய் வழக்கை நான் ஜோடித்து தாக்கல் செய்து உள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி எனக்கும் நண்பரா என்றால் ஆமாம். என் மகனும் எதிரியும் ஒன்றாக படித்தார்களா என்றால் இல்லை. அவர்கள் ஒன்றாக வேலை பார்த்தார்களா என்றால் இல்லை.

6. எனக்கு பணம் வாங்கிய பிறகு எத்தனை மாதம் கழித்து காசாலை கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் 4 மாதம் கழித்து கொடுத்தார். எதிரி என்னிடம் ஒரு ஆவணம் எழுதிக் கொடுத்ததாக சொல்லும் நிலையில் அந்த ஆவணத்தின் நகலை வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் எதிரி உண்மையில் சென்னையில் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றாலும் அதற்கான ஆதாரங்கள் உள்ளது என்றாலும் சரியல்ல. எனக்கும் ஆனந்தனுக்கும் தான் பழக்கம் என்றாலும் அதுவும் நான் எனது குடோனை அவருக்கு வாடகைக்கு விட்டதன் அடிப்படையில் ஏற்பட்ட பழக்கம் என்றாலும் சரியல்ல. நான் எந்த குடோனும் அவருக்கு வாடகைக்கு கொடுக்கவில்லை.

எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் பணத்திற்கு நான் எவ்வளவு வட்டி பேசினேன் என்றால் வட்டி பேசவில்லை. இந்த வழக்கில் என் மகனை ஒரு சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால் தயார் தான். என் வீட்டில் சிசிடிவி கேமரா உள்ளதா என்றால் கிடையாது. நான் இந்த வழக்கு ஆவணங்களில் எதற்காக எதிரி என் மகனுடைய நண்பர் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அதற்கு குறிப்பிட்ட காரணம் இல்லை. நான் என் மகனுக்கு தெரியாமல் கடன் கொடுத்தேனா என்றால் ஆமாம். ஏன் என் மகனிடம் கேட்கவில்லை என்றால் அதற்கு குறிப்பிட்ட காரணம் இல்லை. ஒருவேளை என் மகனிடம் சொல்லி இருந்தால் அவர் பணத்தை கொடுக்க வேண்டாம் என சொல்லி இருப்பாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எதிரி என் மகனின் நண்பர் என சொல்லும் நிலையில் அவருக்கே தெரியாமல் பணம் கொடுத்ததாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் அண்ணன் கொடுக்க வேண்டிய பணத்திற்காக எதிரி மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு எதிரி வந்ததற்கு சான்றாக ஏதேனும் போட்டோவோ அல்லது ஆதாரமாக வைத்துள்ளேன் என்றால் இல்லை. நான் பணம் கொடுத்ததாக சொல்லும்போது வேறு நபர்கள் யாரேனும் உடன் இருந்தார்களா என்றால் என் மனைவி இருந்தார். என் மகனுக்கும் எனக்கும் சுமூகமான உறவு நிலை உள்ளதா என்றால் உள்ளது. பண விவகாரத்தில் மட்டும் நாங்கள் ஒருவரோடு ஒருவர் விபரங்களை பகிர்ந்து கொள்வது கிடையாது.

7. ஒரே காசோலையாக பெற்றுக்கொள்ளாமல் ஏன் இரண்டு காசோலையாக வாங்கிக் கொண்டேன் என்றால் அவர்தான் அப்படி கொடுத்தார். எதிரியின் அண்ணன் எனக்கு தர வேண்டியது ரூ.1,50,000/- மட்டுமே என்றாலும் நான் வட்டிக்காக கூடுதல் தொகை போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. என் மனைவியைத் தவிர வேறு கண்ணுற்ற சாட்சிகள் உள்ளார்களா என்றால் கிடையாது. எதிரி என்னிடம் கொடுத்த கை லெட்டரில் என்னென்ன எழுதி இருந்தார் என்றால் தனது தொழிலை விருத்தி செய்ய வேண்டும் என்றும் நான் அவருக்கு தந்தை மாதிரி என்றும் சொல்லி மூன்று மாதத்தில் பணத்தை திரும்ப கொடுத்து விடுவேன் என்று குறிப்பிட்டு எழுதிக் கொடுத்திருந்தார். அதில் வட்டி பற்றி என்ன குறிப்பிட்டிருந்தார் என்றால் அதை பற்றி நாங்கள் பேசிக் கொள்ளவில்லை என்பதால் எதுவும் குறிப்பிடவில்லை.

8. எதிரி ஒரு முறை கூட என்னை இதற்கு முன்பு நேரில் பார்த்ததில்லை என்றால் தவறு. ஆனந்தனுக்கு என் மகன் குடோன் வாடகைக்கு விட்டது பற்றி எனக்கு எப்படி தெரியும் என்றால் ஊரார்கள் பேசிக்கொள்ள தெரியும். அந்த குடோன் யார் பெயரில் உள்ளது என்றால் எனது சின்ன மகன் பெயரில் உள்ளது .அந்த மகன் என்ன தொழில் செய்கிறார் என்றால் அவரும் ஆசாரி வேலை தான் செய்கிறார். அந்த மகனின் பெயர் என்ன என்றால் மதி என்பதாகும். அவருக்கு என்ன வயது

என்றால் 34 ஆகும். எனக்கு எதிரியை பற்றி எதுவும் தெரியாத நிலையில் அவருடைய சென்னை முகவரி எப்படி கிடைத்தது என்றால் முன்பே அவர் என்னிடம் அந்த முகவரியை கொடுத்திருந்தார். நான் ஆனந்தன் எனக்கு காசோலைகளை அனுப்பி வைத்த அஞ்சலக உறையிலிருந்து முகவரியை வைத்துக்கொண்டு அந்த முகவரியை தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் பேக்கரி தொழில் செய்கிறார் என்றுதெரியும். அவர் எந்த முகவரில் தொழீல் செய்கிறார் என்றால் ஈசானிய தெருவில் என் மகனுக்கு சொந்தமான கடையில் வைத்துள்ளார்.

9. மற்றொரு கடை CRC செட் அருகில் திறக்கப்போவதாக சொன்னார். எதிரிக்கு எவ்வளவு ஆண்டு வருமாணம் வரும் என்று தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது. எதிரியின் அண்ணன் ஆனந்தன் தான் மேற்படி தொழிலை செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி சென்னையில் தங்கி வேலை செய்து வருகிறார் ஆனால் எதிரி பேக்கரி தொழில் செய்கிறார் என்று கூறுவது உண்மையா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. எதிரிக்கும் எனக்கும் எந்த பழக்கமும் இல்லை என்றாலும் எதிரிக்கும் மகனுக்கும் தான் பழக்கம் இந்த நிலையில் எதன் அடிப்படையில் பணத்தை எதிரிக்க பணத்தை கொடுத்தேன் என்றால் குடும்ப நண்பர் முறையில் கொடுத்தேன். எனது வீட்டிற்கு எத்தனை முறை எதிரி வந்தார் என்றால் இரண்டு முறை வந்தார். இரண்டு முறை மட்டும் வந்தவரை நம்பி பணம் கொடுத்து உண்மையா என்றால் நான் எப்போதும் கடையில் தான் இருப்போம் அந்த வகையில் எதிரி பழக்கம். எனக்கும் ஆனத்நனுக்கும் தான் பழக்கம் என்றாலும் ஆனந்தன் தனது தம்பியின் செக்கை கொடுத்துள்ளார் அந்த செக்கை பெற்றுக்கொண்ட தாங்கள் வழக்கிற்காக மேற்படி எதிரிக்கு பணம் கொடுத்ததாக ஒரு பொய்யான வாதத்தை வைத்து இந்த வழக்கை தொடர்ந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணைஇல்லை.**